# தினசரி நடப்பு நிகழ்வுகள் - 08.08.2018

## தமிழக நிகழ்வுகள்

- உணவுப் பொருளில் கலப்படத்தை தடுக்கவும் மக்களுக்கு தரமான உணவுப் பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்யவும் தமிழக அரசு சார்பில் உணவு பாதுகாப்பு மேல் முறையீட்டு தீர்ப்பாயம் (Food Safety Appeal Tribunal) அமைக்கப்பட்டுள்ளது.
  - இதன் தலைவராக நீதிபதி ஏ.ஜாகீர் உசேன் என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.
- **குறிப்பு:**
  - உணவு பாதுகாப்பு சட்டம் (Food safety Act) – 2006ம் ஆண்டு கொண்டு வரப்பட்டது.

## இந்திய நிகழ்வுகள்

- ‘‘பொருட்கள் மறுசுழற்சி: கொள்கை வழிகாட்டுதல்’’ மூலம் நீடித்த வளர்ச்சி குறித்த நிதி ஆயோக்-கின் சர்வதேச மாநாடு மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகத்தின் தலைமையில் புதுடெல்லியில் நடைபெற்றது.

- கிராம பெண்களுக்கு அதிகாரமளிக்க வகை செய்யும் ‘‘மகளிர் சக்தி மையம் (Mahila Shakti Kendra) என்ற திட்டத்தை மத்திய அரசு தொடங்கியுள்ளது.
  - இத்திட்டம் 2017-18 முதல் 2019-20 வரை செயல்பாட்டில் இருக்கும். சமுதாய பங்களிப்புடன் செயல்படும் இத்திட்டத்திற்கு மத்திய அரசின் 60 சதவீத நிதியும், மாநில அரசின் 40 சதவீத நிதியும் ஒதுக்கப்படும்
  - வடகிழக்கு மாநிலங்களை பொறுத்த வரையில் மத்திய அரசு 90 சதவீத நிதியும் மாநில அரசு 10 சதவீத நிதியும் ஒதுக்கும்.

- E–விசா திட்டம் : 165 நாடுகளுக்கு விரிவாக்கம்
  - 2014-ஆம் ஆண்டு நவம்பர் 27-ந் தேதி மத்திய அரசு, இணைய தளம் வாயிலாக வெளிநாட்டுப் பயணிகளுக்கு அனுமதி அளிக்கும் E–விசா திட்டத்தை அறிமுகம் செய்தது. முதலில் 40 வெளி நாடுகள் இணைக்கப்பட்டன.
  - 2015-ஆகஸ்டு மாதத்தில் 113 நாடுகளுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. தற்போது (ஆகஸ்டு 07, 2018) மத்திய அரசு 165 நாடுகளுக்கு E–விசா வசதியை விரிவுபடுத்தியுள்ளது.

- நாட்டிலேயே முதல் முறையாக பசு பாதுகாவலர்களுக்கு அடையாள அட்டையானது, உத்ரகாண்ட் மாநில அரசால் வழங்க உள்ளது.
  - இதன் மூலம் பசு பாதுகாப்பு என்ற பெயரில் கும்பலாக தாக்குவது மற்றும் கொலை செய்வது போன்ற வன்முறை சம்பவங்கள் நடைபெறுவது தடுக்கப்படும்.

**விளையாட்டு நிகழ்வுகள்**

- சர்வதேச ஹாக்கி சம்மேளனம் வெளியிட்டுள்ள ஹாக்கி ஆடவர் அணி தரவரிசைப் பட்டியலில் இந்தியா 5வது இடத்தைப் பெற்றுள்ளது.
  - இந்தப் பட்டியலில் ஆஸ்திரேலியா முதலிடத்திலும் அர்ஜென்டினா இரண்டாவது இடத்திலும் உள்ளனர்
  - மகளிர் அணி தரவரிசை பட்டியலில் இந்தியா 9வது இடத்தில் உள்ளது. இந்தப் பட்டியலில் நெதர்லாந்து முதல் இடத்தில் உள்ளது.

- தென்னாப்பிரிக்காவின் ஜோகன்ஸ்பெர்க்கில் நடைபெற்ற 2018ம் ஆண்டிற்கான 17 வயதிற்குட்பட்ட பிரிக்ஸ் பெண்கள் கால்பந்து போட்டியில் (BRICS U-17 Foot Ball – 2018) பிரேசில் கால்பந்து அணி முதலிடத்தையும், சீனா இரண்டாவது இடத்தையும் பெற்றுள்ளது.

**அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்**

- இளைஞர்களுக்கு ஆன்லைன் தொழில் நுட்பத்தை பாதுகாப்பாக பயன்படுத்துவதற்கான திறனை வளர்ப்பதற்காக முக நூலானது (Face Book), “டிஜிட்டல் கல்வியறிவு நூலகம் (Digital Literacy

Library) தொடங்க உள்ளது.

**விருதுகள்**

- அமைதியான உலகத்தை உருவாக்கப் பாடுபட்ட தலைவருக்கு வழங்கப்படும் ராபர்ட் எ.ஃ.ப் கென்னடி மனித உரிமை விருது (Robert F. Kennedy Human Rights Award) அமெரிக்கா முன்னாள் அதிபர் ஒபாமாவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

We Shine Academy™